# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 10 திங்கட்கிழமை 25.11.2024 கதிர் 428







# போரினால் இறந்தவர்களை நினைவுகூரத் தடை இல்லை!

## புலிகளின் சின்னங்களைப் பாவிக்க வேண்டாம் என அமைச்சர் அறிவுறுத்தல்



**போரில் கொல்லப்பட்ட தமது உறவுகளை நினைவு கூருவதற்கு எந்தத் தடையுமில்லை. ஆனால் புலிகள் இயக்கத்தின் கொடிகள், இலச்சினை, சின்னங்கள் மற்றும் சீருடைகளைப் பயன்படுத்த முடியாது என பொதுப் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

**கல்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அமைச்சரிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

2➤

## இரு அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் ஒருவர் தமிழர்





இரு அமைச்சுக் களுக்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க புதிய செயலாளர்களை நியமித்துள்ள நிலையில் அதில் ஒருவர் தமிழ ராவார்.

இது தொடர்பான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதியின்செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் இன்று (25) ஜனாதிபதி செயலகத்தில் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்படி, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின்

2➤

## சீனப் பிரதி அமைசர் இலங்கைப் பிரதமருடன் சிநேகபூர்வ சந்திப்பு



பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவுக்கும் சீனாவின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் சன் ஹைய னுக்கும் இடையிலான சிநேக பூர்வ சந்திப்பொன்று நேற்று 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அலரிமாளிகையில் இடம பென்றது.

இந்தச் சந்திப்பின் போது, சீனக் கம்யூனிஸ் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், சர்வதேச விவகாரத்தொடர்பாடல் திணைக்கள உயர்மட்ட அதிகாரிகள், இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் மற்றும் இலங்கைக்கான சீனத் தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர், சரோஜா பால்ராஜ், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் ஹேமலி வீரசேகர, நாடாளு மன்ற உறுப்பினர் சமன்மலி குணசிங்க, பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி மற்றும் வெளிவிவகார அமைச்சின் கிழக்கு ஆசியாவின் பணிப்பாளர் நாயகம் ருவந்தி டெல்பிட்டிய ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்

## வீடுகளை ஒப்படைக்காத முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

மாதிவெல நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்புகளை வழங்காமல் 5 முன்னாள் உறுப்பினர்கள் வெளிநாட்டில் தங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்காரணமாக வீடுகளை பொறுப்பெடுக்கும் நாடாளுமன்ற அதிகாரிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

சுமார் 80 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரை வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. 20 உறுப்பினர்களின் வீடுகள் மட்டுமே ஒப்படைக்கப்பட உள்ளதாக நாடாளுமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உடனடியாக வீடுகளை ஒப்படைக்குமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரிகள் நினைவூட்டல் கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதிவெல வீடுகள்

2➤

## ஆளுநர் தலைமையில் மன்னாரில் நடமாடும் சேவை!

வடக்குமாகாண ஆளுநர் தலைமையில் வடமகாண நடமாடும் சேவை நாளை மன்னாரில் நடைபெறவுள்ளது.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நாளை காலை முதல் இடம்பெறவுள்ள இந்நடமாடும் சேவையில் வட மாகாணத்திலுள்ள அரச திணைக்களங்களின் சேவைகளைப் பொதுமக்கள் பெற்றுக் கொள்ள முடியும் எனவும், மோசமான காலநிலை ஏற்படுமாயின் நடமாடும் சேவை பிறிதொரு நாளுக்குப் பிற்போடப்படலாம் எனவும் வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

## இரு அமைச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி அயேஷா ஜினசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளராக மலர்மதி கங்காதரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

## போரினால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில், இலங்கையின் உள்நாட்டுப் போரில் உயிரிழந்த தமது உறவினர்களை நினைவு கூருவதற்கு வட பகுதி மக்களுக்குத் தடை எதுவும் இல்லை. அதனை அரசாங்கம் தடுக்கவும் இல்லை.

ஆனால் விடுதலைப்புலிகள் அமைப்பு இலங்கையில் ஒரு தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாகும். நவம்பர் 27ஆம் திகதி அனுசரிக்கப்படும் மாவீரர் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் சின்னங்கள், சீருடைகள் அல்லது படங்களைப் பயன்படுத்தி நிகழ்வுகளை நடத்துவதற்கான அனுமதி இல்லை.

எது எப்படியாயினும், இலங்கையின் சட்டம் ஒழுங்கை மீறாத வகையில் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதை யாரும் தடைசெய்யவில்லை. ஆனால் நினைவேந்தல்களுக்கு பல்வேறு வியாக்கியானங்களை வழங்க சில குழுக்கள் அடிக்கடி முயற்சிக்கின்றன" என்று குறிப்பிட்டார்.

மேலும், விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய நினைவுச் சின்னங்களைப் பாவித்து நிகழ்வு நடத்துவதைத் தவிர்க்குமாறு பொதுப் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

# கட்சியின் தோல்விக்கு விக்கியே காரணம்

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணியின் பாரிய பின்னடைவுக்கு சி.வி. விக்னேஸ்வரனின் மதுபானசாலை அனுமதிப்பத்திரம் விவகாரம் தான் மிகப் பெரிய காரணம் என தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர் வ.பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் குறிப்பிட்டார்.

மேலும் தெரிவிக்கையில், "என்றும் இல்லாத வகையில் எல்லாக் கட்சிகளையும் விட நாங்கள் பாரிய பின்னடைவை எதிர்நோக்கியமைக்கான காரணம் சி.வி. விக்னேஸ்வரனின் மதுபானசாலை அனுமதிப் பத்திரம் விவகாரம்தான்.

உண்மையை வெளியில் சொல்லத்தான் வேண்டும். அத்தோடு இதனை நான் அவரிடமும் நேரடியாகத் தெரிவித்து இருக்கின்றேன்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் நாங்கள் இருந்திருந்தால் மிகப் பெரிய வெற்றியை அடைந்திருக்க முடியும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

அத்தோடு, இன்றும் நான் அந்தக் கட்சியில் இருந்து பிரியவில்லை. அந்தக் கட்சியைச் சாந்தவர்கள்தான் என்னைக் கட்சியை விட்டு விலக்கி வைத்தனர்.

தமிழ் மக்கள் அருவருப்பான அரசியல் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டமைக்கு காரணம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான்.

அடுத்த கட்சிகளைத் தொடர்ந்து விமர்சித்துக் கொண்டிருக்கையில் தற்போது தேசிய மக்கள் சக்தியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் மூன்று ஆசனங்களை வென்று விட்டனர்.

இந்தநிலையில், தமிழ் மக்கள் கூட்டணி இனி தேர்தல் அரசியல் என்று வரும்போது தனித்து நில்லாது கூட்டாகச் செயற்படுவதுதான் எமது நோக்கம்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## வீடுகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்கும் நடவடிக்கை அடுத்த மாதம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சுமார் 40 புதிய உறுப்பினர்கள் வீடுகள் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக நாடாளுமன்ற அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com





## நாடாளுமன்றத்தில் குழப்பத்தை ஏற்படுத்திய அர்ச்சுனா

கொழும்பு, நவ. 25

நாடாளுமன்றத்திற்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனுடன் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக சபாநாயகர் அஷோக ரங்வல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்தில் அர்ச்சுனா அமர்ந்தமையினால் குழப்ப நிலைமை ஏற்பட்டது. இதன்போது அவர் வெளியிட்ட சில கருத்துக்கள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அதற்கமைய, இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினருடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். நேற்று பிற்பகல் கண்டிக்கு விஜயம் செய்த சபாநாயகர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

“தனி ஒரு நபராக அவரது அபிலாஷை என்னவென்று எங்களுக்குத் தெரியாது. அவரை பிரதிநிதித்துவப்படுத்திய மக்களின் அபிலாஷை மிகத் தெளிவாக உள்ளது.

மக்கள் இன்று நாட்டில் அப்படியொரு விடயத்தை எதிர்பார்க்கவில்லை. அந்த மக்கள் வடக்கு, மேற்கு அல்லது கிழக்கைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் ஒற்றுமையுடன் நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு என நாங்கள் நம்புகின்றோம்.

அது ஒரு தனியொருவரால் மேற்கொள்ளப்பட்டது என்பது எமக்கு தெரியும். அதுபற்றி அவரிடம் பேசி, அவரது அனைத்து பேஸ்புக் கணக்குகளையும் சரிபார்த்தோம். நாமும் அவருடன் பேசலாம், புத்திசாலித்தனமாக செயல்பட்டு எதிர்காலத்தில் இதை தெளிவுபடுத்துவோம்” என்றார்.

இதேவேளை, தற்போதைய அரசாங்கம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் செயற்படும் எனவும் சபாநாயகர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வைத்தியசாலைக்கு சென்ற கர்ப்பிணி பெண் மரணம்



கொழும்பு, நவ. 25

கொழும்பு, தெமட்டகொட பகுதியிலுள்ள வீடொன்றில் கருக்கலைப்பு செய்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில், கொழும்பு தனியார் வைத்தியசாலையின் வைத்தியர் மற்றும் தாதி ஒருவரும் நேற்று தெமட்டகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாரஹேன்பிட்டியில் உள்ள தனியார்வைத்தியசாலையொன்றின் மகப்பேறு வைத்தியர் ஒருவரும் மருத்துவ நிலையத்தின் தாதி ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிலியந்தலை பிரதேசத்தில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் தனது வயிற்றில் உள்ள குழந்தையின் சிறுநீரக செயலிழப்பு தொடர்பில் இந்த வைத்தியரை சந்தித்துள்ளார்.

குழந்தையின் உயிரைக் காப்பாற்ற முடியாது, எனவே அறுவை சிகிச்சை மூலம் தாயின் உயிரைக் காப்பாற்ற முடியும் என்று மருத்துவர் கூறியுள்ளார்.

அறுவை சிகிச்சைக்கு சம்மதித்தால் அதற்கு இரண்டரை லட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் என்றும் மருத்துவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு இணங்கிய பெண், தனது கணவருடன் நேற்று தெமட்டகொடயில் உள்ள வைத்தியரின் கிளினிக்கிற்கு வந்துள்ளார்.

அங்கு கருக்கலைப்பு செய்த பின்னர் சுகவீனமடைந்த பெண் நாரஹேன்பிட்டி தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் அங்கு உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் சந்தேகத்திற்குரியது என உயிரிழந்த பெண்ணின் கணவர் பிலியந்தலை பொலிஸில் செய்த முறைப்பாடு செய்துள்ளார்.

அதற்கமைய, வைத்தியரையும் தாதியையும் கைது செய்த தெமட்டகொட பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)






## யாழில் இளைஞன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம, நவ. 25

யாழ்ப்பாணம் நீர்வேலி பகுதியில் ஆணொருவர் தவறான முடிவெடுத்து கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவமானது நேற்று (24) இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, நீர்வேலி வடக்கு, நீர்வேலி பகுதியைச் சேர்ந்த சோதிலிங்கம் மிதுர்சன் (வயது 28) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞனை காணவில்லை என உறவினர்கள் தேடியவேளை அவரது சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டுள்ளதுடன் உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நாமும் கூட மனித இனம்



இந்த கேடுகெட்ட உலகம் நல்லவர்களை வாழவிடாது. தானும்நன்றாக வாழாது. வாய்தான் திருக்குறளையும் திருவாசகத்தையும் ஓதும். மனதில் ஓடும் எண்ணமோ திருக்குறளின் வாக்கியங்களை அவமதிப்பதாகவும் திருவாசகத்தின் சாரத்தை புண்படுத்துவதாகவும் இருக்கும். அப்படி என்றால் செய்யும் செயல்கள் எப்படி இருக்கும்? நேர்மையை பின்தள்ளிவிட்டு, வாய்மையை ஒடுக்கிவிட்டு, நாணயத்தை தந்திரம் எனும் போர்வைக்குள் மறைத்து, எளிமையாகவும் உண்மையாகவும் பேசுபவர்களை முட்டாள் எனப்பட்டம் கட்டிவிட்டு, பொதுநலம் என்ற வேடத்தில் சுயநலத்தை பூர்த்திசெய்துகொள்வதிலும்தான் இருக்கும்.

பிறந்தநாள் வாழ்த்து, விசேடங்களுக்கு வாழ்த்து, திருமண நாளுக்கு வாழ்த்து மடல் வைத்தால் பதிலுக்கு ஒரு கைநாட்டு படம் கூட வைக்காத பண்பில்லாத மக்கள்தான் இவ்வுலகில் அதிகம். ஒரு வேளைக்கு கூட உணவில்லாத ஆதரவற்ற மக்களை கண்டுகொள்ளாமல், இரவு பகல் பார்க்காமல் என்நேரமும் குடி, கூத்து என்று பணத்திமிரில் ஆட்டம் போடும் மனநிலை கொண்ட மனிதர்கள் கும்பல் தான் அதிகம்.

அரசாங்க அலுவலகத்தில்தான் லஞ்சம், நேரம்கடத்துதல், மாமூல்தரவில்லையென்றால் ஒருவரை அல்லாடவைத்தல் என்று பார்த்தால், இதைவிட கேவலமான நிலையில் தனியார் நிர்வாகங்களும் அலுவலகங்களும் செயல்படுகின்றன. இதில் பணிபுரியும் பலருக்கு உண்மையான நடத்தை, பண்பாடு, கடமை என்றால்என்னவென்றுதெரியாது அல்லதுதெரிந் தாலும் இவைகளை அலட்சியப்படுத்தும் வகையில்வாடிக்கையாளர்களிடம்நடந்துகொள்ளுதல். நான் எந்த அளவுக்கு வடிகட்டின முட்டாள் என்றால், தனியார் வங்கிகளில் லஞ்சம்



இல்லை என்று அறுபது வயதை தாண்டியும் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் என் உறவினர் ஒருவர் மூலம் அப்படியெல்லாம் இல்லை, பெரிய அளவில் கடன் மற்றும் பண உதவி வாங்கி தரும் பட்சத்தில் அங்கேயும் இப்படிப்பட்ட பணம்வெட்டுதல் மற்றும் சலுகை வழங்குதல் போன்ற செயல்கள் நடக்கின்றன என்றுகேள்விப்பட்டு அதிர்ச்சியுடன்வேதனையும் அடைந்தேன்.

அரசியலில் நடக்கும் அதர்மம், அநீதி மற்றும் அக்கிரமங்களை நாம் வெகுவாகவே அறிவோம். அரசியல் ஒரு பெரிய சாக்கடை என்றால், அதன் நிர்வாகத்தில் நல்லவர்களாக இருப்பவர்கள் தாமரை மலர்களைப்போல தத்தளித்த வண்ணம் வாழ்கின்றோம்.

நான் ஏற்கெனவே கடவுள், கர்மவினை இதைப்பற்றியெல்லாம் பல கட்டுரைகளை இதே வலைத்தளத்தில் வெளியிட்டிருக்கிறேன். யாருக்காவது சந்தேகம் இருந்தால் என்னுடைய கட்டுரைகள் சிலவற்றை படித்தால் அல்லது படித்திருந்தால் இது புரியவரும். இன்று எனக்கு வரும் ஒரு சிந்தனை ஓட்டம் என்னவென்றால் ‘தவறு செய்பவர்களுக்கு ஒரு முறை மன்னிப்பு தரலாம் (சரியான விளக்கமின்றி தவறிச்செயும் செயலே தவறு என்பது என் கருத்து). ஆனால் செய்த தவறையே மீண்டும் மீண்டும் செய் பவர்கள், தவறினை தாண்டி, அறிந்து புரிந்து கொடிய பாவச்செயல்கள் செய்பவர்களை, இந்த பிர பஞ்ச சக்தி உடனுக்குடன் தண்டிக்கவேண்டும்.

இந்த தண்டனைகள் எப்படி இருக்க வேண்டும் என்றால், தெனாலி ராமன் பூனைக்கு கொதிக்கும் பாலை வைத்தது போல இருக்கவேண்டும். வினைக்கு ஏற்ற பயனை எதற்கு தள்ளிப்போடுவது? எப்படி ஜ/ரத்திற்கு மாத்திரை எடுத்தால் ஜ/ரம் குணமாகிறதோ அதைப்போல குற்றத்திற்கு ஏற்ற தகுந்த தண்டனையை உடனுக்குடன் கொடுத்தால், இந்த சமுதாயத்தில் அநீதி, அக்கிரமம், அநாகரீகம், அதர்மம், தில்லுமுல்லு, பயங்கரவாதம் எல்லாமே குறைந்தது பாதிக்கு பாதி குறைந்துவிடும். அதுவே இந்த சமுதாயத்திற்கு ஒரு பெரிய ஆறுதலையும் நிம்மதியையும் தரும்தானே?

என்னுடைய உறவினர்கள் நண்பர்கள் சிலருக்கு நான் லட்சக்கணக்கில் பணம் கொடுத்து உதவி இருக்கிறேன். பணத்தை திருப்பித்தருவது என்பதை பற்றி அவர்கள் நினைக்காவிட்டாலும், நன்றியறிதல் கூட இல்லாமல் ஜடங்கள் மாதிரி அவர்கள் இருப்பது உண்மையிலேயே வேதனையாகத்தான் இருக்கிறது.

ஆனால்நன்றியதலைப்பற்றி இன்றுபேசினால் “என்ன சரியான முட்டாப்பயலாக இருப்பான் போலிருக்கு” என்ற முணுமுணுப்புதான் அதிகம் இருக்கும். அந்த விதத்தில் நான் உண்மையிலேயே ஒரு முட்டாப்பயல்தான் என்பதை பகிங்கரமாக அறிவிக்கிறேன்.

வள்ளலார்என்றமாமனிதர் 19 ஆம்நூற்றாண்டு வாழ்ந்தார். ஜீவகாருண்யம் கொல்லாமை இவைகளை இரு கண்ணாகக்கொண்டு கருணையேவாழ்வின்லட்சியமாகவாழச்சொன்ன தெய்வீக மனிதர். யாருய்யா இதையெல்லாம் இப்போ காதுல போட்டுகிறாங்க? மீன் கிடைத்த மீனு, கோழி கிடைத்தால் கோழி, ஆடு கிடைத்தால் ஆடு, மாடு கிடைத்தால் மாடு, பன்னி கிடைத்தால் பன்னி, வேறு ஏதாவது கிடைத்தால் அது, இதைத்தானே வயிற்றில் போடுகிறார்கள். ஆறாம் அறிவு வளர்ந்து சிறந்து விளங்கவேண்டிய மனிதன் பிற உயிரை அழிக்காத தருமம் எனும் மந்திரத்தை தரித்து வாழ்வதற்கு பதில் அழிப்பதே தருமம் என்றல்லவோ இருக்கிறான்.

பாரதியார் அன்று சொன்னார் “தனியொருவனுக்கு உணவில்லையேல் ஜகத்தினை அழித்திடுவோம்” என்று. அவர் இன்று இருந்தால் என்ன கூறியிருப்பார் தெரியுமா “பணக்காரன் நினைத்தது நடக்கவில்லை என்றால் இந்த சமுதாயத்தையே அழித்துவிடுவான்”. இப்படிப்பட்ட சமுதாயம் இருந்துதான் என்ன?

நான் எற்கெனெனவே முன்னொரு கட்டுரையில் குறிப்பிட்டதைப்போல ‘கோடிக்கணக்கான ஏழைகள் உலகில் உணவின்றி சாகின்றனர், பட்டினி கிடக்கின்றனர், அல்லல் படுகின்றனர். இவர்களுக்கு உணவு அளிக்காமல் எல்லோரும் இந்நாட்டு மன்னர், யாதும் ஊரே யாவரும் கேளிர், கடவுளின் படைப்பில் அனைவரும் சகோதர சகோதரிகளே என்று சொல்லிவிட்டு தம்முடைய சுயநலமே குறிக்கோளாக இருக்கும் இந்த சமுதாயத்திற்கு வெட்கம் இல்லை, மானம் இல்லை, சூடு இல்லை சொரணை இல்லை.

நான் கடவுளை ஒருவேளை சந்திக்கநேருமானால் அவரிடம் கேட்கும் ஒரே கேள்வி “இப்படிப்பட்ட உலகத்தை ஏன் படைத்தாய்? அழகான உண்மையான இயற்கையுடன் இணைந்து வாழ்வதற்கு இந்த கொடிய சமுதாயத்திற்கு வக்கு இருக்கிறதா துப்பு இருக்கிறதா?”

ஒருவேளை கடவுள் என்னை ஒரு வரம் கேள் என்று கேட்பாராயின் “என்னை ஒரு மானமுள்ள கவரிமானாக பிறக்கவிடுங்கள். ஆனால் ஒரு நிபந்தனை ‘ காட்டில் உள்ள வனவிலங்குகள் எல்லாமே சைவ உணவை மட்டும் உண்ணும் விலங்குகளாக இருக்கவேண்டும்”.

# வெள்ள அனர்த்தத்தை எதிர்கொள்ள வெளியிடப்பட்ட முக்கிய அறிவுறுத்தல்

கொழும்பு, நவ. 25

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்களால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்துக்கு முகம் கொடுத்தல் தொடர்பாக மாவட்ட அரச அதிபரால் பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடி முக்கிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

1. வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்படக்கூடிய இடங்களை அடையாளப்படுத்தி முன்னாயத்த நடவடிக்கைகளை எடுத்தல்.

2. வெள்ள அனர்த்த ஆபத்து காரணமாக வதிவிடங்களை விட்டு வெளியேறும் மக்கள் தற்காலிகமாக தங்குவதற்கான தங்குமிடங்களைத் தயார்படுத்தல்.

3. தற்காலிக தங்குமிடங்களில் தங்குவோருக்குச் சமைத்த உணவு வழங்க நடவடிக்கை எடுத்தல்.

4. மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல்.

5. ஆபத்தான மரங்கள் அல்லது கிளைகள் ஏற்கனவே அகற்றப்பட்டதற்கு மேலதிகமாக, மேலும் இனங்காணப்பட்ட ஆபத்தான மரங்கள் அல்லது கிளைகளை அகற்ற நடவடிக்கை எடுத்தல்.

6. ஆபத்தான பனை மரங்களை அகற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட பிரிவுக்குரிய பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்துக்கு எழுத்து மூலம் அறிவித்து அகற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

மேலும் 24 மணி நேரம் இயங்கும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் தொலைபேசி இலக்கங்களுக்கு (0773957894 /0212221676 / 0212117117 மற்றும் 117) பொதுமக்கள் அனர்த்தம் தொடர்பாக தகவல்களை வழங்குமாறும் அரச அதிபர் அறிவித்துள்ளார் என்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலக ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(ஐ)

# 3 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது

கொழும்பு, நவ. 25

இலங்கை ஊடாக வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்ற இந்திய யுவதி உட்பட மூவர் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட யுவதி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் வசிக்கும் 24 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

இந்தியன் ஏர்லைன்ஸின் யுஐ-231 விமானத்தில் மும்பையிலிருந்து நேற்று பிற்பகல் 03:00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.




குறித்த பெண் இலங்கைக்குள் நுழைவதற்கான வீசாவை பெற்று, தனது இந்திய கடவுச்சீட்டு மற்றும் பிற ஆவணங்களை அனுமதிக்காக குடிவரவு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

சோதனையின்போது பெண்ணின் கடவுச்சீட்டு, சர்வதேச பொலிஸாரின் தொலைந்து போன மற்றும் திருடப்பட்ட தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் மேற்கொண்ட விசாரணையின் போது போலியான முறையில் கடவுச்சீட்டு தயாரிக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது.

வெளிநாடு செல்ல முயன்று 3 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது ;ஐனெயைெ புசைட வூாசநந யுசசநளவநன ஐெ முயவரயெலயமந யுசைிழசவ

அதற்கமைய குறித்த யுவதி மற்றும் அவருடன் பயணித்த மேலும் இரண்டு இந்தியர்கள் கைது செய்தனர்.

குறித்த மூன்று பேரும் அன்றைய தினமே இந்தியாவுக்கு மீண்டும் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

(ஐ)



# சஜித் தரப்புக்கு பெரும் சிக்கல்: வலுக்கும் தேசியப்பட்டியல் விவகாரம்



நடைபெற்று முடிந்த பொது தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைக்கப்பெற்ற 5 தேசிய பட்டியலில் ஆசனங்களுக்கான பெயர்கள் அக்கட்சியின் பொதுச்செயலாளரால் முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி குறித்த ஆசனங்களுக்கான கோரிக்கையை இருபதுக்கும் மேற்பட்டோர் முன்வந்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவின் பெயர் மட்டுமே இதன் போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய தேசியப்பட்டியலில் இடம்பெற்றுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த ஹிருணிகா பிரேமச்சந்திர, வைத்திய சமல் சஞ்சீவ, அசரீ திலகரத்ன, எரான் விக்கிரமரத்ன, மனோ கணேசன் உள்ளிட்டோர்களில் நால்வருக்கு மீதமுள்ள ஆசனங்கள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தோடு, மீதமுள்ள நான்கு ஆசனங்களில், பிரதிநிதித்துவப்படுத்த பெண்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டால், தனக்கு ஒரு வாய்ப்பு வேண்டும் என்று ஹிருணிகா பிரேமச்சந்திர கூறியதுடன், முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தனக்கான ஆசனத்தையும் கோரியுள்ளார்.

மேலும், தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றுக்க தெரிவான போதிலும், தேசியப்பட்டியல் ஆசனம் ஒன்றையும் தமது தரப்பும் விரும்புவதாக கூறியுள்ளார்.

மேலும், சஜித் பிரேமதாச தேசியப்பட்டியல் ஆசனம் தொடர்பில் தமக்கு வாக்குறுதி வழங்கியுள்ளதாக மனோ கணேசனின் தரப்பும் தெரிவித்துள்ளன. (ஐ)






# ஐபிஎல் ஏலத்தில் பல கோடிகளுக்கு வாங்கப்பட்ட இலங்கை வீரர்கள்

*2025 இந்தியன் பிரீமியர் லீக் மெகா ஏலத்தில் இலங்கையின் வனிந்து ஹசரங்க மற்றும் மஹீஸ தீக்சன ஆகியோர் ராஜஸ்தான் ரோயல்ஸ் இற்கு விற்கப்பட்டனர்.*

*சவூதி அரேபியாவின் ஜெட்டாவில் நடைபெற்ற முதல் நாள் ஏலத்தில் ஹசரங்க 5.25 கோடியை பெற்றுள்ளார்.*

*இதற்கிடையில், தீக்சன 4.40 கோடி பேரத்தில் வாங்கப்பட்டுள்ளார்.*

*ஹசரங்க 20க்கு 20 போட்டிகளில் 16.65 சராசரியுடன் 287 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். 2,314 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.*

*இதில் ஒன்பது அரைசதங்களும் அடங்குகின்றன.*

*தீக்சன இதுவரை மூன்று ஐபிஎல் பருவங்களில் (2022–2024) சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடினார் அவர் 27 போட்டிகளில் 25 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.*

*(ஐ)*



# யாழில் இடம்பெற்ற மாவீரர்களை நினைவேந்தும் நிகழ்வு







யாழ்தீவகம்வங்களாவடிச்சந்தியில்அமைந்துள்ள நினைவுத் தூவியில் தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் மாவீரர்கள் இன்று காலை நினைவேந்தப்பட்டனர்.

மாவீரர் வாரத்தின் நான்காம் நாளாகிய இன்று யாழ் தீவகம் வங்களாவடி சந்தையில் அமைந்துள்ள நினைவுத் தூவியில் மாவீரர்கள் நினைவு கூறப்பட்டனர் .

நிகழ்வில் மாவீரர்கள் நினைவாக பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது இந் நிகழ்வில் மாவிரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் வேலணை பகுதி வர்த்தகர்கள் பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்

மேலும், தமிழ் தேசிய செயற்பாட்டாளர் குழுமம் மற்றும் தீவக நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் தீவகம் வேலனை துறையூர் பகுதியில் மாவீரர் பெற்றோர்கள் உறவினர்கள் இன்று மதிப்பளிக்கப்பட்டனர்.

மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் வேலனை துறையூர் சந்தியில் இருந்து மங்கள வாத்தியங்கள் முழங்க வேலணை ஐயானார் சனசமூக நிலைய மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டு மாவீரர் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்ட நினைவு மண்டபத்தில் பொதுச் சுடரேற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் மாலைகள் அணியப்பட்டு கண்ணீர் மல்க மலர் வணக்கம் செலுத்தப்பட்டது

மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்களை கௌரவிக்கும் முகமாக மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன நிகழ்வில் யாழ்ப்பாணம் தீவகப் பகுதி மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்

,(ஐ)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# நடைமுறைக்குவரவுள்ள புதிய சட்டம்!




வீதிகளில் குப்பைகளை இடுதல் மற்றும் எச்சில் உமிழ்தல் என்பவற்றுக்கு எதிராக புதிய சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

புத்தளம் பகுதியில் செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை சுத்தமானதொரு நாடாக மாற்றுவதற்கு வீதிகளில் குப்பைகளை வீசுதல், வெற்றிலை எச்சிலை உமிழ்தல் போன்ற செயற்பாடுகளை மக்கள் தவிர்க்க வேண்டும்.

அதேவேளை குறித்த செயற்பாடுகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, இவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்குக் கடுமையான புதிய சட்டங்களை அரசாங்கம் கொண்டுவர வேண்டும் என தெரிவித்துள்ளார். (ஐ)




## இலங்கையில் இன்றைய டொலர் பெறுமதி!



இலங்கை மத்திய வங்கி இன்று (25) வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை 295.5174 ரூபாவாகவும் கொள்வனவு விலை 286.5102 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அதைப்போன்று ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் விற்பனை விலை 373.9129 ரூபா மற்றும் கொள்வனவு விலை 359.5740 ரூபாவாகும்.

யூரோ ஒன்றின் விற்பனை விலை 311.4900 ரூபா எனவும் கொள்வனவு விலை 298.6713 ரூபா எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.11.2024 இல் வெளியிடப்பெற்றது.